CC. No.10/2020

<u>Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.08.2026</u>

<u>PW–1– குழந்தையேசு (75) த/பெ. லூர்துசாமி, கொம்மேடு</u>

<u>(எதிரி ஆஜர்</u>

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. ஆஜர் எதிரி நிலமும் எனது நிலமும் பக்கத்து பக்கத்தில் உள்ளது என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்னிட்டு நான் எதிரில் நிலத்தில் நீர் பாசனத்திற்காக பைப் லைன் அமைத்திருந்தேன் என்றாலும் அவரும் எனது நிலத்தில் பைப்லைன் அமைத்திருந்தார் என்றாலும் சரிதான் இவ் வழக்கு சம்பவத்திற்கு சுமார் மூன்று நாட்களுக்கு முன்பு JCB மூலமாக பள்ளம் எடுத்தேன். அப்போது சுத்தம் செய்த போது தான் பைப்லைன் உடைந்து விட்டது என்றால் சரிதான். மேற்படி பைப் லைன் உடைத்தது தொடர்பாக ஊர் பொதுமக்கள் முன்னிலையில் பைப் லைன் சரி செய்ய சொன்னார்கள் என்றால் எனது சித்தப்பா மகன் ஜார்ஜ் என்பவர் மட்டும் என்னிடம் வந்து கேட்டார் அதற்கு நான் அவரிடம் எனது பைப் லைனை எதிரில் உடைத்து விட்டார் எனவே இந்த பைப் லைனை நான் சரி செய்ய இயலாது மேலும் இதற்கு பிறகும் பைப்லைன் செல்ல வேண்டாம் என கூறிவிட்டேன்

2. எதிரி எனது பைப்லைனை இவ்வழக்கு சம்பவத்திற்கு சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு உடைத்து விட்டார் அது தொடர்பாக நான் புகார் ஏதும் அளித்தேனா என்றால் இல்லை. ஜார்ஜ் என்பவர் என்னிடம் வந்து கேட்ட பிறகு நான் எதிரியின் பைப் லைனை சரிசெய்து கொடுக்கவில்லை வழக்கு சம்பவம் நடந்தபோது ஜார்ஜ் மற்றும் தயாநிதி ஆகியோர்கள் அங்கு இருந்தார்கள். நான் சம்பவத்தன்று நிலத்தில் என்ன செய்து கொண்டு இருந்தேன் என்றால் நிலத்தில் மாட்டினை கட்டி விட்டு மீண்டும் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தேன்.

3. சம்பவத்தின் போது மேற்குறிப்பிட்ட ஜார்ஜ் மற்றும் தயாநிதி ஆகியோர்கள் மட்டும்தான் உடன் இருந்தார்கள் என்றாலும் வேறு யாரும் அப்போது அங்கு இல்லை என்றாலும் சரிதான் சண்டை சம்பந்தமாக எனது மகளுக்கு யாரும் தகவல் அளிக்கவில்லை அவர் தற்செயலாக அப்போது சம்பவ இடத்திற்கு வந்திருந்தார். எனது மகள் சுமார் 1.30 மணிக்கு மேல் அங்கு வந்தார். எனது மகள் சம்பவ இடத்திடம் வந்த போது எதிரி அங்கு இல்லை என்றால் சரிதான் எனது மகள் ஜோஸ்மின் மற்றும் எனது தங்கை ஆகிய இருவரும் என்னை செஞ்சு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள்.

4. இவ்வழக்கு தொடர்பாக நான் காவல் நிலையம் சென்று புகார் அளிக்கவில்லை நான் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது காவலர்கள் என்னை விசாரித்து எழுதிக் கொண்டு சென்றார்கள் தேதி தற்போது நினைவில் இல்லை. நான் செஞ்சி மருத்துவமனையில் இருந்து முண்டியம்பாக்கம் மருத்துவமனை சென்ற பிறகு மூன்றாவது நாள் என்னை விசாரித்ததாக நினைவில் உள்ளதுநான் நடந்த சம்பவத்தை வாய் வழியாக கூறினேன். அதனை காவலர் எழுதிக்

கொண்டார்.அதன்பின்னிட்டு இவ்வழக்கு தொடர்பாக காவலர்கள் என்னை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான்.

5. சம்பவத்தன்று எனது மகன் மற்றும் போஸ்கோ என்ற நபர் ஆகிய இருவரும் சேர்ந்து எதிரியை தாக்கியதாக அவர்கள் மீது புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் நான் மருத்துவமனையில் இருந்ததால் அது விவரம் எனக்கு தெரியாதுமேற்படி புகாரின் அடிப்படையில் குற்ற எண் 332/2018 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது விவரம் எனக்கு தெரியாது நான் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சுமார் 4 நாட்கள் சிகிச்சையில் இருந்திருப்பேன். சண்டைக்கு பிறகும் எதிரியின் உடைந்த பைப் லைனை நான் சரி செய்து கொடுத்தேனா என்றால் இல்லை .

6.மருத்துவரிடம் எதிரி என்னை கல், தடி மற்றும் கை ஆகியவற்றை கொண்டு தாக்கியதாக கூறினேன். எதிரி என்னை கத்தியால் தாக்கியதாக மருத்துவரிடம் குறிப்பிட்டிருந்தல் அது தவறு என்றால் சரிதான். காவலர்களிடம் எதிரி தாக்க பயன்படுத்தியதாக சொல்லப்படும் கல், தடி ஆகியவற்றை ஆஜர்படுத்தவில்லை என்றால் சரிதான்நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் சம்பவத்தன்று நான் தான் உடைந்த பைப்லைன் அருகே மீண்டும் பள்ளம் எடுத்து அவரது பைப் லைனை சேதம் செய்தேன் என்றாலும் அதனை அவர் வந்து கேட்டபோது அவரை நான் தான் தாக்கி விட்டேன் என்றாலும் சரியல்ல. பைப் லைனை சேதப்படுத்திய போது எனக்கு காயம் ஏற்பட்டது என்றாலும் அதனை வைத்து எதிரி மீது உள்ள முன்விரோதம் காரணமாக அவர் மீது பொய் புகார் அளித்துள்ளேன் என்றாலும் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும் நானும் எனது மகன் ஆகியோர்கள் தான் எதிரியை சம்பவத்தன்று தாக்கி விட்டோம் என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.